**வடமாகாணசபையின் பாதீடு விவாதம் - 2014**

**12.11.2013 அமர்வில்**

**முதலமைச்சர் இறுதியுரை**

இன்று 2014ம் ஆண்டுக்கான எமது பாதீடு (Budget) விவாதம் இறுதிக்கட்டத்திற்கு வந்துள்ளது. எமது சகோதர உறுப்பினர்கள் ஆட்சி செய்யும் கட்சி எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், தமிழ்ப் பேசும் உறுப்பினர்கள் சிங்களம் பேசும் உறுப்பினர்கள் என்று பேதம் பார்க்காமல், தமிழர்கள் முஸ்லீம்கள் என்ற பேதம் பார்க்காமல் எமது விவாதத்தை ஒரு சுமூகமான முடிவுக்குக் கொண்டு வரத் தம்மாலான உதவிகளைச் செய்துள்ளார்கள்.

ஆங்காங்கே நடைபெறும், நடைபெற்றுள்ள தவறான நடவடிக்கைகள் பற்றிப் பேசினார்கள். வருங்காலம் நன்றாக அமைய நாங்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றிப் பேசினார்கள். பணநெருக்கடியினால் எமக்கு எதையுமே செய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை வெளிப்படுத்தினார்கள். இராணுவப் பிரசன்னம் எமக்கு ஏற்படுத்தியிருக்கும் அவலங்கள், நட்டங்கள் பற்றி அங்கலாய்த்தார்கள். காணிகள் பறிபோவதைப் பற்றிக் கண்டித்தார்கள். வினைத்திறன் அற்ற உள்ளூராட்சி சபைகள் பற்றியும் வேறு எமது செயற் கூடங்கள் பற்றியும் மனவருத்தம் தெரிவித்தார்கள். இலஞ்சம் ஊழல் மலிந்து வரும் நிலை பற்றிக் கவலைப்பட்டுக் கூறினார்கள் நடந்து முடிந்த போரினால் ஏற்பட்டுள்ள பாரிய சமூகச் சீர்கேடு பற்றிக் குறிப்பிட்டார்கள். வடமாகாணத்தில் என்றுமே இல்லாதவாறு இளைஞர் யுவதிகளின் மத்தியில் ஏற்பட்டிருக்கும் கலாச்சார, ஒழுக்க, சமூகச் சீரழிவு, பற்றியும் நீதிநெறி, அறமாகியன அப்பட்டமாக வழுகிச் செல்வதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். காணாமல்ப் போனோர், கைதாகிப் பல வருடகாலம் சிறையில் வாழும் எம்மவர் பற்றிப் பேசினார்கள்.

எனினும் கிடைத்துள்ள குறைந்த நிதியின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட இவ்வருடத்தைய பாதீடு பற்றி பலமான எதிர்ப்புக்கள் எதுவும் தெரிவிக்கப் படவில்லை. அதுவும் எதிர்க்கட்சியினர் எமக்களிக்கும் ஆதரவு எம்மால் பாராட்டப்பட வேண்டியதொன்று. தொடர்ந்தும் நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தவர் போல் அடுத்த ஒரு வருடத்திற்கும் சேர்ந்து கருமமாற்ற விழைவோமாக! அதற்கடுத்த வருடம் பற்றி அடுத்த வருடத்தைய பாதீட்டின் போது கூறுவேன்!

என்னைப் பொறுத்த வரையில் என் நோக்கு தூரநோக்காகவே இருந்து வருகின்றது. பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் எமக்குப் போதுமானதல்ல என்பதையும் அதன் குறைபாடுகளை எடுத்தியம்பியும் எமக்குரிய நியாயமான அதிகாரங்களை வெகு விரைவில் பெற நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியே என்முன் நிற்கின்றது. இருக்கும் சட்ட திட்டங்களைக் குறைகூறும் அதே நேரம் இருப்பதை எவ்வாறு செயற்திறன் நோக்கி அழைத்துச் செல்லலாம் என்ற கேள்வியும் என் மனதில் பூதாகாரமாக மேலோங்கியுள்ளது. இனி வருங்காலங்களில் பல சிக்கல்களை நாங்கள் எதிர் நோக்கப் போகின்றோம். அவற்றிற்கு முகம் கொடுப்பது எப்படி என்ற கேள்வியும் எழாமல் இல்லை. அதாவது வெறுமனே சட்ட திட்டங்களைக் குறை கூறிவிட்டு நாங்கள் எங்கள் பதவிகளைப் பாதுகாத்துக் கொண்டு வாளாதிருக்கலாம். ஆனால் நாங்கள் எவரும் அதற்காக இங்கு வரவில்லை. எமது வாக்காளப் பெருமக்களுக்குப் போதுமான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும் வடமாகாண மக்கள் என்ற முறையில் எமது அரசியல் அபிலாசைகளை வென்றெடுக்கவும் என்ன செய்யவேண்டும் என்ற எண்ணமே எம் ஒவ்வொருவர் மனதிலும் மேலோங்கி நிற்கின்றது என்பதை நான் உணர்கின்றேன்.

இருப்பதை செயற்திறன் நோக்கி எப்படி அழைத்துச் செல்லலாம் என்று ஆராய்ந்தோமானால் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் உறுப்புரை 154(T) என்பதின் ஏற்பாடுகளை நாம் கூடிய அளவு பாவிக்கலாம் என்பது ஒரு கருத்து.

அதாவது பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இதுவரை காலமும் நடைமுறைப் படுத்த எத்தனித்த அதிகார மையமானது மத்திய அரசாங்கமே. மாகாணசபைகளுக்கு அவற்றின் சட்டம் பற்றிய பணிப்புக்களும், வழிநடத்தலும் ஆற்றுப் படுத்தலும் நடைபெற்று வந்தன. இதனை வடக்கு கிழக்கு தவிர்ந்த மாகாணசபைகள் இதுவரை எதிர்க்கவில்லை. ஆனால் முதலில் கிழக்கு மாகாணசபையும் இப்பொழுது வடமாகாணசபையும் மத்தியிலிருந்து பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை நெறிப்படுத்துவதைக் கண்டிக்கின்றன. அதுவும் இராணுவப் பின்னணி கொண்ட ஆளுநர்களை நியமித்து அவ்வாறு செய்வது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு செயல் என்று எடுத்துக் கூறி வருகின்றன. தமிழ்ப் பேசும் மக்களின் செயற்பாடு ஒற்றுமைப் பட்டு நடைபெற்று வந்ததானால் கிழக்கின் குரல் அங்கிருந்தே மிகத்திடமாக வெளிவந்திருக்கும். துர்அதிஷ்டவசமாக அங்கு நடப்பில் இருக்கும் பெரும்பான்மையான மக்கட் தொகையினரின் மனதுக்கு மாறாகவே ஆட்சி நடைபெறுகின்றது. தமிழ்ப் பேசும் தமிழ் முஸ்லிம் கட்சிகள் ஒன்று சேர்ந்து மாகாணசபையை நடத்தியிருந்தால் அவர்களும் சேர்ந்து எம்மைப் போலவே குரல் கொடுத்திருப்பார்கள்.

எது எவ்வாறிருப்பினும் உடனே எம்முன் இருக்கும் பாரிய பணி பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை வட-கிழக்கு மாகாண மக்களுக்குச் சார்பாக வழிநடத்துவதே. அதன் குறைகளைக் கூறிக்கொண்டு எமது அரசியல் இலக்குகளைப் பற்றியே கூறிக் கொண்டிருந்தால் பாதிக்கப்பட்ட எம்மக்கள் எம்மை மன்னிக்க மாட்டார்கள். சாய் கதிரைகளில் இருந்து கொண்டு அரசியல் விமர்சனங்களில் ஈடுபடுவோருக்கு பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கை அவலங்கள் பற்றி கரிசனை இருப்பதற்குக் காரணமில்லை. முன்னர் கூறியது போன்று மத்திய அரசாங்கம் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தாமே நடைமுறைப் படுத்த விழையாமல் மாகாணசபைகளின் கருத்துக்களைக் கேட்டு அவ்வாறு செய்ய இடமளித்தால் அரசியல் யாப்பின் உறுப்புரை 154(T) யின் ஏற்பாடுகளை எமக்கு சாதகமாகப் பாவிக்கலாம். சுருங்கக் கூறின் உறுப்புரை 154(T) பின்வருமாறு கூறுகின்றது –

இந்த அத்தியாயத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தும் முகமாக அல்லது நிர்வாகத் தேவைகளை முன்னிறுத்துமுகமாக அல்லது முகம் கொடுக்கும் சிக்கல்களை அகற்றுமுகமாக வர்த்தமானியில் பிரசுரித்து அதன்படி ஜனாதிபதியானவர் அரசியல் யாப்புக்கு முரணாகாத முறையில் தேவையான அல்லது தோதான உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்: அல்லது உரிய பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம்.

இதன் ஏற்பாடுகளின் கீழ் தேசிய ஆணைக்குழு ஒன்றை நியமித்து மாகாணசபையின் சுமூகமான வழிநடத்தலுக்கு முட்டுக்கட்டைகளாக அமையும் எல்லா விடயங்களையும் அடையாளம் கண்டு அவற்றை நீக்க வழிவகுக்கலாம். எனவே பாராளுமன்றத்தினிடமிருந்தோ அமைச்சர் குழாமிடம் சென்றோ அனுமதி பெறாமலே மேற்படி நடவடிக்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி இறங்கலாம்.

அதேபோல மாகாணசபைகளுக்கு அரசியல் யாப்பில் வழங்கியிருக்கும் அதிகாரங்கள் இப்பொழுதும் கொழும்பில் இருந்தே பிரயோகிக்கப் படுகின்றன. அவற்றை அடையாளம் கண்டு மாகாணசபைகளுக்கே கையளிக்க வழியமைக்கலாம். தற்பொழுது கொழும்பில் இருந்து கொண்டு மாகாணசபையினர் தம் மக்களுக்கென இயற்றும் நடவடிக்கைகளைக் கொச்சைப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இந்நிலை மக்கள் நலம் கருதி, அதிகாரப் பகிர்வை மனதில் கொண்டு மாற்றியமைக்கப் படலாம்.

தற்பொழுது மாகாணசபைகள் தமக்குத் தேவையான அபிவிருத்தித் திட்டங்களைத் தாமே தயாரிக்க முடியாமல் இருக்கின்றன. ஏனென்றால் உரிய அலுவலர்களை நிர்ணயிக்கும், நியமிக்கும் அதிகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினிடம் தற்போது உள்ளது. மேலும் நிதி வழங்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது.

அரசியல் காரணங்களுக்காகத் தேவையற்ற அலுவலர்களைக் கொண்டு நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் எம்மீது திணிக்கப் பட்டுள்ளது. ஆளணி சம்பந்தமாக திருத்தங்கள் கொண்டுவர இடமளிக்கப் படவேண்டும்.

மேலும் மத்திய, மாகாண அதிகாரங்கள் ஒருமித்து அவற்றிற்கு வழங்கப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களில்ப் பல சிக்கல்கள் எதிர்நோக்கப்பட்டுள்ளன. அவற்றைத் தவிர்க்க ஆவன செய்யலாம்.

இவ்வாறு பல விடயங்ளை வெளிப்படுத்தலாம். ஆனால் அவை இந்தப் பாதீடு விவாதத்திற்கு அப்பாற்பட்டதென சிலரால் கூற முடியும். இந்த சிறிய அளவு விடயங்களை நான் இங்கு குறிப்பிட்டமைக்குக் காரணம் அடுத்த வருடம் பாதீடு வரமுன் எமது சட்டத்தில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்பதற்காக. மற்றும் எமது மத்திய, மாகாண உறவுகளில் முன்னேற்றம் காணப்பட வேண்டும் என்பதற்காக. இதனால்த்தான் மக்கள் நலனை மனதில்க் கொண்ட, மனித உரிமைகள் பற்றி நன்றாய் உணர்ந்த, சமூக, சமுதாய அமைப்புக்களின், செயற்பாடுகளின் நடைமுறைபற்றி நன்றாய் அறிந்த, படித்த, பண்புள்ள, மனிதத்துவ கலாச்சாரம் மிக்க ஒருவர் ஆளுநராக உடனே நியமிக்கப் படவேண்டும் என்று கருதுகின்றேன். வடமாகாண இராணுவத் தளபதியாய் இருந்து தற்போது தொடர்ந்து அதிகாரத்தில் இருக்கும் ஆளுநரை எந்த விதத்திலும் தனிப்பட்ட முறையில்த் தாக்காது இந்த வேண்டுதலை விடுக்கின்றேன். பனையின் கீழ் இருந்து பால் குடித்தாலும் அதைக் கள்ளென்றே பார்வையாளர்கள் கணக்கெடுப்பார்கள். இராணுவ மேலதிகாரி ஒருவர் சிவில் பதவி வகித்தால் மக்களின் பார்வை அது போலத்தான் இருக்கும்.

இந்த மூன்று நாட்களும் இந்த விவாதத்தைச் செவ்வனே நடத்த உதவிபுரிந்த எமது தலைமைச் செயலாளர் உள்ளடங்கிய எமது செயலாளர்கள் அனைவருக்கும் முதற்கண் எமது நன்றிகள் உரித்தாகுக. தலைமைச் செயலாளருடன் எமக்கிருப்பது தனிப்பட்ட முரண்பாடு அல்ல. சட்ட ரீதியாக நாங்கள் கொண்டிருக்கும் முரண்பட்ட நோக்குகளே. அவற்றைப் போக்க மத்திய அரசாங்கம் முன்வர வேண்டும். மற்றும் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்களுக்கும் அவரின் உதவியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள் உரித்தாகுக. இங்கு நடப்பவற்றைப் பொதுவாகச் சரியாகவும் சிலதடைவைகளில் விஷமத்தனமாகவும் பத்திரிகைகளில் பிரசுரிக்க உதவி செய்த ஊடக நண்பர்கள் (நண்பிகளுஞ் சேர்த்து) எமது நன்றிக்குப் பாத்திரமானவர்கள்.

ஈற்றில் எமது சபைத் தலைவருக்கும் எதிர்க்கட்சி அன்பர்களுக்கும் எமது பக்க உறுப்பினர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்

முதலமைச்சர்

வடமாகாணசபை